**செய்தி வெளியீடு எண்: 027** **நாள்:10.05.2021**

## பத்திரிக்கை செய்தி

நாட்டின் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டிற்கு உதவும் வகையில் தொழில் முனைவோர்களை உருவாக்குவதிலும், அதிக அளவில் வேலை வாய்ப்புகளை பெருக்குவதிலும் பெரும்பங்கு வகிக்கும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் தலைமையில் கிண்டியிலுள்ள சிட்கோ தலைமை அலுவலகத்தில் 10.05.2021 அன்று நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் தலைமை ஏற்று நடத்தி, ஆய்வு செய்து மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு. தா.மோ.அன்பரசன் அவர்கள் அறிவுரைகள் வழங்கினார். இந்த பெருந்தொற்று காலத்தில் அதை எதிர்த்து நாம் மேற்கொள்ளும் யுத்தத்தில், தேவையான உபகரணங்கள் மற்றும் ஆக்சிஜன் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் மற்றும் தொடர்ச்சியாக இயங்கும் தொழில் நிறுவனங்கள் நன்கு செயல்பட்டு அரசிற்கு உதவி வருகின்றன. அந்நிறுவனங்களுக்கு தேவையான நிதியுதவி உட்பட, அனைத்து உதவிகளையும் தமிழ்நாடு அரசு செய்யும் எனவும் உறுதி கூறினார்.

தமிழ்நாடு சிட்கோவானது, 1970 ஆம் ஆண்டு முதல் தற்பொழுது வரை 122 தொழிற்பேட்டைகளை உருவாக்கி சிறப்பாக நிர்வகித்து வருகிறது.

இப்பேரிடர் காலத்தில், தமிழ்நாட்டிலுள்ள சிட்கோ தொழிற்பேட்டைகளில் செயல்படும் தொழில் நிறுவனங்களில் பெருந்தொற்று பரவலினை தடுக்கும் பொருட்டு அரசின் பெருந்தொற்று பரவல் தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகளை ஒவ்வொரு தொழில் நிறுவனத்திற்கும் அறிவுறுத்தி அதனை தவறாமல் கடைபிடிக்கவும், பெருந்தொற்று பரவாமல் தடுக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும் இத்தொழிற்பேட்டைகளில் செயல்படும் தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் அனைத்து பணியாளர்களுக்கும் தடுப்பூசி போடும் வகையில் தொழிற்பேட்டைகள் / அருகிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிறப்பு முகாம்கள் ஏற்படுத்தி அனைத்து பணியாளர்களையும் பெருந்தொற்றிலிருந்து காக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் தமிழகத்தில் புதிய தொழில் முனைவோரை உருவாக்குவதிலும் தொழில் புரிந்து வரும் தொழில் முனைவோருக்கும் தேவையான பயிற்சி வகுப்புகள், தொழில் சிந்தனை உருவாக்கத்திற்கான கூட்டங்கள், சவால்களை எதிர்நோக்கும் பயிற்சி என தொடர்ந்து தொழில் முனைவோருக்கு உறுதுணையாக

இருந்து வருகிறது. தொழில் முனைவோருக்கு தங்கள் தொழிலில் வெற்றி பெற, வழிகாட்டுதல்கள், பயிற்சிகள், நிதி ஆதாரம் போன்ற உதவிகள் அதிகம் தேவைப்படுகிறது.

தொழில் ஆணையரகம், சிட்கோ, டான்சி, இடிஐஐ மற்றும் எம்–டிப் ஆகிய துறைகள் குறித்த விரிவான விளக்கப்படக்காட்சி காண்பிக்கப்பட்டது.

இந்த ஆய்வின் போது, கொரோனா பெருந்தொற்று காலத்தில் தொழில் முனைவோர் சந்திக்கும் இன்னல்களை களைய புதிய உக்திகள் வகுத்து அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்து தொழில் துறையில் தமிழகம் முதன்மை மாநிலமாக திகழ செயல்படுமாறும் அவர் அறிவுறுத்தினார்.

கூட்டத்தில் கூடுதல் ஆணையர்/ தொழில் வணிக இயக்குநர் திரு.சு. சிவராசு, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். தமிழ்நாடு சிட்கோ நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி.இரா.கஜலெட்சுமி, இ.ஆ.ப. அவர்கள் மற்றும் இடிஐஐ, நிறுவனத்தின் இயக்குநர் திரு. கு. இராசாமணி,இ.ஆ.ப. ஆகிய அரசு அதிகாரிகள் சிறப்புரை ஆற்றினார்கள். நிறைவாக இடிஐஐ, நிறுவனத்தின் இயக்குநர் திரு. கு. இராசாமணி,இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரை ஆற்றினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**